அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 5/97(111)

எனது இல. எக்ஸ் ரீ யு/21(111)7
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
1999:07..16.....ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதி
திட்டமொன்றை ஏற்படுத்துதல்(அக்ரஹார)

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 1997.01.31 ஆந் திகதிய 5/97 இலக்க, 1997.09.01 ஆந் திகதிய 5/97(1) இலக்க 1998.12.30 ஆந் திகதிய 5/97(11) ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமானது.

02. அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் பின்வரும் விடயங்களுக்கு ஏற்புடையதாக செயற்பட வேண்டுமென முடிவு செய்யப் பட்டுள்ளது.

(அ) விவாகமான அரசாங்க உத்தியோகத்தர்களில் தங்கி வாழ்கின்ற விவாகமாகாத 26 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளும் விவாக மாகாத அரசாங்க உத்தியோகத்தர்களில் தங்கி வாழும் 26 வயதுக்குக் குறைந்த விவாகமாகாத சகோதரர்களும் சகோதரிகளும் இக் காப்புறுதித் திட்டத்தில் உள்ளடங்குவர்.

(ஆ) அக்ரஹார கடன் உத்தரவாதக் காப்புறுதித் திட்டம் நடைமுறைக்கு வருமுன் பெறப்பட்ட கடன்களுக்கான உத்தரவாதிகள், முன்னர் பெற்ற கடன்களுக்கான தவணைப் பணங்கள் ஒழுங்காகச் செலுத்தப்பட்டிருக்குமிடத்து, விடுவிக்கப்படுவர்.

(இ) பிரசவத்திற்காக கர்ப்பிணிகளை வாகனமொன்றில் மருத்துவ சாலைக்குக் கொண்டு செல்வதற்கும் திரும்ப அவரைக் கொண்டு வருவதற்கும் ரூபா 500/- பிரயாணச் செலவாக வழங்கப்படும்.

(ஈ) அரசாங்க அலுவலரொருவரை அரசாங்க சேவைக்குப் புறம்பான நிறுவனமொன்றுக்கு அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அல்லது அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில், ஒரு தற்காலிக அடிப்படையில் விடுவித்தல், காப்புறுதி உரிமைகளைப் பெறுவதற்கொரு தடையாக இருக்கமாட்டாது. (வெளிநாட்டில் தொழிலாற்றுவதற்காக் சம்பளமற்ற விடுமுறை பெறுபவர்களைத் தவிர).

(உ) பிணியால் நிலையமொன்றில் சிகிச்சை பெறுகின்ற உத்தியோகத்தரொருவரினால், செய்யப்படும் உரிமைக் கோரிக்கைகளைப் பொறுத்தவரை நோய் நிர்ணய அட்டையின் மூலப் பிரதிகளுக்குப் பதிலாக, தமது திணைக்களத் தலைவரினால் சான்றுபடுத்தப்பட்ட நோய் நிர்ணய அட்டையின் படப்பிரதி ஏற்றுக் கொள்ளப்படும். (இம் முறை 97.01.01 ஆந் திகதியிலிருந்து செயற்பட்டு வருகிறது)

(ஊ) அரசாங்க மருத்துவசாலையொன்றில் சிகிச்சை பெறும்போது உரிமைக் கோரிக்கையில் மருத்துவர் மேலொப்பமிட வேண்டியதில்லை. எவ்வாறாயினும் தனியார் மருத்துவசாலை ஒன்றில் சிகிச்சை பெறுவதாக இருந்தால், அத்தகைய மேலொப்பம் அவசியமாகும்.

(எ) அரசாங்க மருத்துவசாலையைச் சேர்ந்த மருத்துவரொருவரிடமிருந்து பெறப்படும் மருத்துவச் சான்றிதழ்/மருத்துவப் பட்டோலை என்பன அவற்றில் அலுவலக முத்திரை இருக்கின்றதா இல்லையா என்பதினைப் பொருட்படுத்தாது, அது ஒரு அலுவலகக் குறிப்பொன்றில் எழுதப்பட்டிருக்குமிடத்து குறித்துரைக்கப் பட்ட மருந்துகளுக்கான செலவுகளை மீள நிரப்புவதற்கான போதிய சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஏ) சாதாரண நோய் ஒன்றுக்காக வெளிச் சிகிச்சைகளுக்குச் செய்யப்படும் செலவுகளை மீள நிரப்பும்போது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் படிவத்தை வைத்தியரைக்கொண்டு பூர்த்தி செய்யவேண்டிய அவசியமில்லை.

(ஐ) வெளிச்சிகிச்சை பெற்றுக்கொண்ட பின்னர் அல்லது மருத்துவசாலையில் உள்ளகச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பின் 90 நாட்களினுள் சம்பந்தப் பட்ட உரிமைக்கோரிக்கையானது இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் உரிய அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தலுக்கான தேவைப்பாடு, அக்ரஹார காப்புறுதித் திட்டம் நடைமுறைக்கு வந்த திகதியான 1997.01.01 ஆம் திகதி வலுவுக்கு வருதலாதல் வேண்டும்.

(ஒ) தனது நிரந்தர, ஓய்வூதிய உரித்துடைய நியமனங்களுக்கு தகுதிகாண்நிலைக் காலப்பகுதி யொன்றிற்கு உட்படவேண்டியுள்ள மாகாண அரசாங்க சேவையின் அரசாங்க உத்தியோகத்தர்களும் இக் காப்புறுதித் திட்டத்தில் சேரலாம்.

( ஒ) கடன் உத்தரவாதக் காப்புறுதித் திட்டமானது சொத்துக் கடன்களுக்கு மேலதிகமாக, தாபன விதிக்கோவையில் குறிப்பிட்டுள்ள எல்லா வகையான கடன்களுக்குமான உத்தரவாதமாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாகும், அதாவது மோட்டார் வாகனங்களை / ஸ்கூட்டர்களை / தையல் மெசின்களைக் கொள்வனவு செய்தல், விபத்துக் கடன்கள் மற்றும் வேறு வகையிலான கடன் சுமையிலிருந்து மீள்வதற்காகக் கொடுக்கும் கடன்கள் முதலியன உள்ளடங்கலாக.

03. அக்ரஹார காப்புறுதித் திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பிரதேச ரீதியில் கூட்டிணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது என்பதுடன் இத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் பொருட்டு அவர்களின் உதவியைப் பெற்றும் கொள்ளலாம்.

04. அக்ரஹார காப்புறுதித் திட்டத்தைச் செயற்படுத்தும்போது போலியான செலவுப் பட்டியல்களைச் சமர்ப்பித்தல், செலவுப்பட்டியல்களில் குறிப்பிட்டுள்ள எண்களைத் திருத்தி உரிமைக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் போன்ற மோசடிகள் நிகழுமாயின் அத்தகைய முறைகேடான செயல்களுடன் சம்பந்தப்படுவோருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

05. மேற்குறிப்பிட்டுள்ள 2(ஒ) ஆம் பிரிவிற்கு அமைய தாபன விதிக்கோவை உரியவாறு திருத்தப்படும்.

06. பொதுத்திறைசேரியினதும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் ஒத்திசைவின்படி இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம் : (பி. ஏ. சேனாரட்ன)
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.

க.வே : மேலே 02(ஒ) பந்தியின் நான்காம் வரிசையில் 'தையல் மெசின்' என்பதற்குப் பதிலாக சைக்கிள்/ மோட்டார் சைக்கிள் எனும் சொற்களைபதிவு செய்யவேண்டும்.